காவிரி பிரச்சினையில்

# உச்சநீதிமன்றம் செல்வதைத் தவிர தமிழ்நாட்டுக்கு வேறு வழியில்லை!

## அமைச்சர் துரைமுருகன் திட்டவட்டம்!

சென்னை,ஆக.12-

**காவிரி பிரச்சினையில் ‘உச்சநீதிமன்றம் செல்வதைத் தவிர தமிழ்நாட்டுக்கு வேறு வழியில்லை’ என்று நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

அமைச்சர் துரைமுருகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

காவிரி பிரச்சினையில் நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பிற்கு பிறகு உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இந்திய அரசியல் சட்டத்திற்குட்பட்ட அனைவரும் கட்டுப்படவேண்டும் என்பது நியதி.

உச்சநீதிமன்ற தீர்ப்பில் ஒவ்வொரு மாதமும் கர்நாடகா காவிரியில் எவ்வளவு நீரை திறந்து விட வேண்டும் என்றும் அந்த நீரை பில்லிகுண்டில் அளவீடு செய்யப்படும் என்றும் தெரிவித்திருக்கிறது.

அதன்படி 2023 ஆண்டு ஜூன் மாதம் 1ம் தேதி முதல் ஆகஸ்டு 11ம் தேதி வரையில் கர்நாடகா 53.7703 டி.எம்.சி தண்ணீரை தமிழகத்திற்கு வழங்கி இருக்க வேண்டும். ஆனால் கர்நாடக அரசு வழங்கி இருப்பதோ வெறும் 15.7993 டி.எம்.சி தான். ஆக நமக்கு ஏற்பட்டிருக்கிற பற்றாக்குறை 37.9710 டி.எம்.சி.



இதன் காரணமாக தஞ்சை தரணியில் காவிரி நீரை எதிர்பார்த்து நிற்கிற பயிர்கள் எல்லாம் காய்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை வறண்டால் தமிழ்நாடே வறண்டு போகும் என்பார்கள்.

**தஞ்சை வறண்டால்**
**தமிழ்நாடே வறண்டு போகும்!**

எனவே நிலைமையை உணர்ந்து உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள Cauvery Water Regulatory Committee மற்றும் Cauvery Water Management Authority ஆகிய இரண்டு அமைப்புகளும் விரைந்து செயல்பட வேண்டும் என்றும், அவர்கள் தமிழகத்திற்கு சேர வேண்டிய தண்ணீரை கர்நாடக அரசிடமிருந்து பெற்றுத்தர கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி, நான் மத்திய நீர்வளத்துறை அமைச்சரை இரண்டு முறை சந்தித்தேன். தமிழக முதல்வர் தளபதி அவர்களும் பிரதமர் மோடி அவர்களுக்கும் ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர் அவர்களுக்கும் கடிதங்களை எழுதி நிலைமைகளை விளக்கி இருந்தார். ஆனாலும், அந்த இரண்டு அமைப்புகளும் உடனடியாக தன் பணிகளை ஆற்ற முன்வராமல் போனது மிகவும் வருத்தத்திற்குரியது.

இறுதியாக நம்முடைய வற்புறுத்தலுக்கு இணங்கி நேற்று (10.8.2023) நடந்த Cauvery Water Regulatory Committee கூட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15,000 CUSECS தண்ணீரை 15 நாட்களுக்கு விடுவது என்று ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் நேற்று (11.8.2023) நடந்த Cauvery Water Management Authority கூட்டத்தில் இது குறித்து 3 மணி நேரத்திற்கு மேல் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அக்கூட்டத்தில் தமிழகத்தின் தேவை கடுமையாக வலியுறுத்தப்பட்டது. ஆனால் கர்நாடகா சார்பில் வழக்கம் போல் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு 15,000 CUSECS அல்ல 8,000 CUSECS மட்டும் தான் அதுவும் ஆகஸ்ட் 22 வரையில் தான் தர முடியும் என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

கர்நாடக அணைகளில் தண்ணீர் இல்லாத நிலைப்பாடு உள்ளதா என்றால் அப்படி அல்ல கர்நாடகாவில் இருக்கிற நான்கு அணைகளையும் சேர்த்து மொத்த கொள்ளளவான 114.571 டி.எம்.சி.யில் 93.535 டி.எம்.சி. தண்ணீர் தேங்கிக் கிடக்கிறது. அதாவது கர்நாடகாவின் மொத்த இருப்பில் 82 சதவிகிதம் தண்ணீர் கர்நாடக வசம் இருப்பில் இருக்கிறது.

**கர்நாடகாவின் இருப்பில்**
**80 சதவீதம் தண்ணீர் இருக்கிறது!**

நீர் இல்லை என்ற நிலை கர்நாடகத்திற்கு இல்லை. தமிழகத்திற்கு தண்ணீர் தரவேண்டும் என்ற மனநிலையும் கர்நாடகத்திற்கு இல்லை.இந்த போக்கு இன்று நேற்றல்ல காவிரி வரலாற்றை அறிந்தவர்களுக்கு தெரியும். காவிரியில் கர்நாடக – தமிழ்நாடு பிரச்சினை என்றைக்கு தோன்றியதோ அன்றையிலிருந்து இந்த நிலையை கர்நாடக அரசு எடுத்து வருவது வருத்தத்திற்குரியது.

வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் உள்ளம் நமக்கு.

பயிர்கள் காய்ந்தாலும் கவலை இல்லை என்ற உள்ளம் கர்நாடகத்திற்கு.

எனவே, தமிழ்நாடு அரசுக்கு உச்சநீதிமன்றம் போவதைத் தவிர வேறு வழியில்லை. விரைவில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, நீதி வென்று, நீரை பெற்று தருவோம் என்பதில் முதல்வர் தளபதி ஆட்சி உறுதியாக இருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

---

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதை

# மக்களவையில் தவறாக மேற்கோள்காட்டிய கருத்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்குக!

## மக்களவைத் தலைவருக்கு நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கடிதம்!

*சென்னை, ஆக.12*

*பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு சென்னையில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரையை மக்களவையில் தவறாக மேற்கோள்காட்டி, கருத்துகளைப் பதிவு செய்துள்ளதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கக் கோரி மக்களவைத் தலைவர் ஓம்பிர்லா அவர்களுக்கு, நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு கடிதம் எழுதியுள்ளார்.*

*இது குறித்து மக்களவைத்தலைவர் அவர்களுக்கு கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு எழுதியுள்ள கடிதம் வருமாறு:-*

*9.8.2023 மற்றும் 10.8.2023 ஆகிய தேதிகளில் மக்களவையில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி ஸ்மிரிதி சுபின் இரானி மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகிய இருவரும் பதிலளித்துப் பேசுகையில்,*

*5.8.2023 அன்று சென்னை, அண்ணாசாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் மாவட்ட அரசு நூலகத்தில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், தமிழ்நாடு அரசின் பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆற்றிய உரையை, மக்களவையில் தவறாக மேற்கோள் காட்டி, கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர்.*

*5.8.2023 அன்று பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு ஆற்றிய உரையின் காணொலிக் காட்சி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.*

*திருமதி ஸ்மிருதி சுபின் இரானி மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் மக்களவையில் ஆற்றிய உரைப் பகுதிகள், அவையைத் தவறாக வழிநடத்தும் வகையிலும், அவர்களது விருப்பு வெறுப்புகளை முன்னிறுத்துவது போன்று இருப்பதாலும், அவதூறு பரப்பக்கூடிய மற்றும் குற்றம் சாட்டக்கூடிய வகையில் இருப்பதாலும், அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும்.*

*மேலும், அமைச்சர் எ.வ.வேலு மக்களவையில் உறுப்பினராக இல்லை. அவையில் உறுப்பினராக இல்லாத ஒருவர் குறித்து, சபாநாயகருக்கு போதிய முன்னறிவிப்பு எதுவும் கொடுக்காமல்,*

*அவர்கள் இருவரும் எந்தக் குற்றச்சாட்டும் எ.வ.வேலு குறித்துக் கூற முடியாது.*

*எனவே, திருமதி ஸ்மிரிதி சுபின் இரானி மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர், 9.8.2023 மற்றும் 10.8.2023 ஆகிய தேதிகளில் மக்களவையில் ஆற்றிய உரையின் போது, அமைச்சர் எ.வ.வேலு பேசியதாகத் தெரிவித்த கருத்துக்கள், மக்களவையின் நடைமுறை மற்றும் அலுவல் நடத்தை விதிகளுக்கு முரணானது.*

*எனவே, அவற்றை நீக்க வேண்டும்.*

*இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.*

---

3 திருக்கோயில்களுக்குச் சொந்தமான

# ரூ.60 கோடி மதிப்பீட்டிலான நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு!

## இந்து சமய அறநிலையத்துறை அதிரடி நடவடிக்கை!

*சென்னை, ஆக. 12*

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச்hசொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.*

*அந்த வகையில் நேற்று (11.08.2023) சேலம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த 3 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.60 கோடி மதிப்பீட்டிலான நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.*

*சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சிக்கம்பட்டி, மாரியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான 5.76 ஏக்கர் நிலத்தினை 16 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வந்தனர். இந்த ஆக்கிரமிப்பை அகற்ற சேலம் மண்டல இணை ஆணையர் உத்தரவின்படி, சேலம் மாவட்ட உதவி ஆணையர் கே.ராஜா முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. இதன் தற்போதைய மதிப்பு ரூ. 50 கோடியாகும்.*

*நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை வட்டம், மணக்குடி, தான்தோன்றீஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான 7.72 ஏக்கர் நன்செய் நிலம் 10 நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. அதேபோல், கீழ்வேளூர் வட்டம், திருக்கண்ணங்குடி, தாமோதர நாராயண பெருமாள் திருக்கோயிலுடன் இணைந்த பெருங்கருணை ரங்கசாமி ஐயங்கார் கட்டளைக்கு சொந்தமாக திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் அமைந்துள்ள 9,546 சதுரடி மனையானது தனிநபரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. இந்த இரு ஆக்கிரமிப்புகளையும் அகற்றிட நாகப்பட்டினம் மண்டல இணை ஆணையர் வி.குமரேசன் மற்றும் உதவி ஆணையர் திருமதி ப.ராணி ஆகியோர் முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.10 கோடியாகும்.*

*ஆக மொத்தம் இன்றைய தினம் மீட்கப்பட்ட 3 திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் மதிப்பு ரூ.60 கோடியாகும்.*

*இந்நிகழ்வுகளில் வட்டாட்சியர்கள் (ஆலய நிலங்கள்) பாலாஜி, பி.எம்.அமுதா, ஓமலூர் காவல் துணை கண்காணிப்பாளர் சங்கீதா, திருக்கோயில் செயல் அலுவலர்கள் கே.புனிதராஜ், கே.கண்ணன், எம்.ஜெயராமன் மற்றும் சிறப்பு அலுவலர்கள் உடனிருந்தனர்.*

---

சாலை விபத்தில் உயிரிழந்த

# நால்வர் குடும்பங்களுக்கு தலா ரூ. 2 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 12 –

செங்கல்பட்டு மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட காட்டுப்பாக்கம் ரயில்வே சாலை சந்திப்பு எதிரில் நேற்று (11.8.2023) காலை சென்னை நோக்கி வந்த லாரி கட்டுப்பாட்டை இழந்து செங்கல்பட்டு நோக்கி சென்ற மூன்று இருசக்கர வாகனங்களின் மீது எதிர்பாராதவிதமாக மோதியதால் ஏற்பட்ட விபத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்தவேதனையடைந்தேன்.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரை விபத்து நடந்த இடத்திற்குச் சென்று தேவையான மீட்பு நடவடிக்கைகளையும், மருத்துவ உதவிகளையும் விரைந்து மேற்கொள்ள கேட்டுக் கொண்டேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் பார்த்தசாரதி என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் பார்த்தசாரதி அவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

தமிழ்நாட்டின் ஆதி திராவிடர் – பழங்குடியினர்க்கான

# ஒன்றிய அரசின் நலத்திட்ட நிதி வெகுவாகக் குறைப்பு!

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் அதிர்ச்சித் தகவல்!

*சென்னை, ஆக. 12-*

*தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் நலனுக்காக ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கி வருகிறது. கடந்த 2018-19 முதல் 2022-23 வரையிலான 5 ஆண்டுகளில் 3 ஆயிரத்து 19 கோடியே 65 லட்சம் வரை நிதி ஒதுக்கியுள்ளது. அதில் கடந்த 2018-19 நிதியாண்டில் மட்டும் ரூ.1,553 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. இந்நிதியை ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக குறைத்து, கடந்த 2022-23 நிதியாண்டில் வெறும் ரூ.159.78 கோடிகள் மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது.*

*இதுகுறித்து தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம், மதுரையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் எஸ்.கார்த்திக் தகவல்கள் பெற்றுள்ளார். தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ஒன்றிய அரசு கடந்த ஆண்டுகளில் ஒதுக்கிய நிதி விபரங்கள் பற்றி கோரப்பட்ட தகவலுக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் நல இயக்குநரகம் அளித்த தகவல்கள் அதிர்ச்சி அளிக்கின்றன.*

*2018-19 ஆம் ஆண்டு ரூ.1,553 கோடி ஒதுக்கிய ஒன்றிய அரசு, 2019-20 ஆம் ஆண்டு 385.51 கோடியும், 2020-21 ஆம் ஆண்டு ரூ.541.29 கோடியும், 2021-22 ஆம் ஆண்டு ரூ.379.59 கோடியும், 2022-23 ஆம் ஆண்டு 159.78 கோடியும் ஒதுக்கியுள்ளது. ஒன்றிய அரசு, தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கான நலத்திட்ட நிதி ஒதுக்கீட்டை அடியோடு புறக்கணித்திருப்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.*

*இவ்வாறு நிதி ஒதுக்கீடுகளை தொடர்ந்து குறைத்து வருவதால் மாநிலத்தில் பல வருடங்களாக தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்காக பிரத்யேகமாக வழக்கத்தில் இருந்து வந்த கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டுப் பணிகள் பாதியிலேயே முடங்கியுள்ளது. தமிழ்நாட்டில் வாழும் பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியினர் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இம்மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சிகளில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.*

---

முனைவர் வி.ஆர்.எஸ்.சம்பத் – முனைவர் சு.பாலசுப்பிரமணியன் பங்கேற்பு!

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு: முதல் உலகத் தமிழ் வளர்ச்சி மாநாடு!

## அமைச்சர்கள் க.பொன்முடி - மு.பெ.சாமிநாதன் - மா.சுப்பிரமணியன் - செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

## வாகை சந்திரசேகர் – விஜயா தாயன்பனுக்கு விருதுகள்!

*சென்னை, ஆக.12-*

*பன்னாட்டுத் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் - சென்னை வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழியல் மற்றும் பண்பாட்டுப்புலம் - தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழகம் இணைந்து நடத்தும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு முதல் உலகத்தமிழ் வளர்ச்சி மாநாடு இன்று (12.8.2023- சனிக்கிழமை) காலை 9 மணி முதல் 7 மணி வரை சென்னை, சைதாப்பேட்டை. தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம், பட்டமளிப்பு விழா அரங்கம் - கல்விப்புல வளாகத்தில் நடைபெறுகின்றது.*

*இவ்விழாவில் சென்னை வளர்ச்சிக் கழகம் வழங்கும் வளர் தமிழ் அறிஞர் விருது தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்திக்கு வழங்கப்படுகின்றது.*

*அதேபோன்று வளர் தமிழ் மாமணி விருது - நிறுவனங்கள் என்ற வகையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் - வாகை சந்திரசேகர், விஜயா தாயன்பன், தில்லி தமிழ்ச் சங்கம் - முகுந்தன், தமிழியக்கம், வேலூர் - முனைவர் அப்துல் காதர் - சுகுமாறன்,*

*ஹூஸ்டன் பல்கலைக் கழக தமிழ் இருக்கை - அமெரிக்கா, பெருமாள் அண்ணாமலை. எத்திராஜ் கல்லூரி தமிழ்த்துறை சென்னை, பேராசிரியர் டாக்டர் நிர்மலா.*

*புதுமை தமிழச்சி இயக்கம், அபுதாபி ஐக்கிய நாட்டு அமீரகம் - டாக்டர் திருமதி ஸ்ரீதேவி சிவானந்தம் ஆகியோர் பெறுகிறார்கள்.*

*அதேபோன்று வளர் தமிழ் மாமணி விருதுகள் முனைவர் ஒப்பிலா மதிவாணன், சாலமன் பார்த்தசாரதி பிள்ளை, திருமதி முனைவர் ஆர்.அனுராதா, முனைவர் எம்.எஸ். லட்சுமி, பாலசுப்பிரமணியன் கண்ணன், செல்வி சுதா சுவர்ணலட்சுமி ஆகியோர் பெறுகின்றனர்.*

*இந்நிகழ்ச்சி காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெறுகின்றது.*

*இந்நிகழ்ச்சியினை சென்னை பன்னாட்டுத் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் - சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் வி.ஆர்.எஸ்.சம்பத், சென்னை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், தமிழியல் மற்றும் புலம் - பேராசிரியர், இயக்குநர் முனைவர் க.பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னின்று செய்துள்ளனர்.*

*மாநாட்டினை, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, ‘உலகெங்கும் கலைஞர்’ எனும் நூலை வெளியிட்டுத் தொடக்கவுரையாற்றுகிறார்.*

*அந்நூலின் முதற்படியை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.*

*எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. சிறப்புரையாற்றுகிறார்.*

*டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., சென்னை மாநகராட்சி துணை மேயர் எம்.மகேஷ்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.*

*முனைவர் சு.பாலசுப்பிரமணியன் நன்றி கூறுகிறார்.*

*நிறைவு விழாவில் - முனைவர் வி.ஆர்.எஸ்.சம்பத் வரவேற்புரையாற்றுகிறார்.*

*வெளிநாடுவாழ் தமிழர் நலன் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தலைமை வகிக்கிறார். செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், விருது வழங்கி நிறைவுரையாற்றுகிறார்.*

*மேலும் வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் கோ.விஸ்வநாதன் சிறப்புரையாற்றுகிறார்.*

*முன்னாள் எம்.பி., டி.கே.எஸ்.இளங்கோவன் முன்னிலை வகிக்கிறார்.*

*தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக் கழக துணைவேந்தர் முனைவர் சோ.ஆறுமுகம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் வி.திருவள்ளுவன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.*

*முனைவர் சு.பாலசுப்பிரமணியன் நன்றி கூறுகிறார்.*

---

## ‘வாட்ஸ் அப்’பில் வந்தது!

## வெட்கமாக இல்லையா நிர்மலா சீதாராமன்?

“தமிழ் நாட்டில் எங்களை இந்தியும் சமஸ்கிருதமும் படிக்க விடவில்லை” – நிர்மலா சீதாராமன்.

**இந்தியும் சமஸ்கிருதமும் தமிழ் நாட்டின் மொழிகளா? தமிழ்நாட்டில் நீங்கள் எங்களை தமிழ் படிக்கவே விடவில்லை என்பதை மறக்க வேண்டாம். நீங்கள் பல நூற்றாண்டு காலமாக சமஸ்கிருதத்தை எங்கள் தலையில் சுமத்தி வைத்திருந்த ஆதிக்க வெறியர்கள். இத்தனைக்கும் நாங்கள் 97% மக்கள். நீங்கள் வெறும் 3%.**

**சென்ற நூற்றாண்டில் நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்த பின்பு தான் தமிழுக்கு உரிய இடம் கிடைத்தது.**

**வெட்கமாக இல்லையா நிர்மலா சீதாராமன்?**